# விருத்தாசலம் நகராட்சி.

## கடலூர் மாவட்டம்.

## நிர்வாக அறிக்கை.

## 2018–2019.

# விருத்தாசலம் நகராட்சி.
# நிர்வாக அறிக்கை
# 2018-2019.

**1. அமைப்பும், நிர்வாகமும்:**

தமிழ்நாடு அரசின் 17.04.1888-ம் நாளிட்ட 139 எண் உத்திரவின் படி ஊராட்சியாக அமைக்கப்பப்பட்ட விருத்தாசலம் ஊராட்சியுடன் அதனைச் சுற்றியுள்ள ஆறு வருவாய் கிராமங்களையும் (ஊராட்சிகள்) சேர்த்து தமிழ் நாடு அரசு ஆணை எண்-59 (ஊரக வளர்ச்சி உள்ளாட்சி துறை) நாள். 12.01.70-ன் படி 17.01.1970முதல் மூன்றாம்நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. பின்பு அரசு ஆணை எண்-533 ஊரக வளர்ச்சி உள்ளாட்சி துறை நாள்-22-03-1975ன்படி 10-05-1975 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்வு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து மன்ற தீர்மான எண்-327 நாள்.29.09.1997-ல் முதல் நிலை நகராட்சியாக உயர்வு செய்ய பிரேரணைகள் அனுமதிக்கப்பட்டதில் அரசு ஆணை எண்-85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.05.1998-ன் படி முதல் நிலை நகராட்சியாக உயர்வு செய்து ஆணையிடப்பட்டு முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

**இந்நகராட்சியில் அடங்கிய கிராமங்கள்:**

விருத்தாசலம் பேரூராட்சியுடன் முதலில் மணலூர், நாச்சியார்பேட்டை,வயலூர், கண்டியங்குப்பம் (ஒரு பகுதி மட்டும்) பூதாமூர், பூந்தோட்டம் ஆகிய ஊராட்சிகளையும் சேர்த்து 17.01.1970 முதல் விருத்தாசலம் நகராட்சியாக உயர்த்தப்பட்டு பின்பு 19.01.1972 முதல் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் 09.01.1972-ம் நாளிட்ட அரசாணை எண்-246-ன் படி கண்டியங்குப்பம் ஊராட்சியில் விடுபட்ட பகுதிகளையும் இந்த நகராட்சியுடன் சேர்த்து முதலில் மூன்றாம் நிலை நகராட்சியாகவும் தற்போது முதல் நிலை நகராட்சியாகவும் இயங்கி வருகிறது.

**மக்கள் தொகை:**

2011-ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 73985 ஆகும்.

**2. அ. மன்றம் :**

## விருத்தாசலம் நகர் மன்ற உறுப்பினர்கள்

**நகராட்சி நிர்வாகம்மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 145, நாள். 24.10.2016ன்படி நகராட்சிகளில் ஆணையாளர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு அதன்படி 01.04.2018 முதல் இந்நாள்வரை திரு. க. பாலு, ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராகவும் பணிபுரிந்து வருகிறார்.**

**அறிக்கையாண்டில் நடைபெற்றகூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் நிறைவேற்றப்பட்ட பொருள்களின் விபரம் கீழ்வருமாறு (2018-2019).**

| **கூட்ட விபரம்** | **கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| நகர் மன்ற சாதாரணக்கூட்டம் | 10 |
| நகர்மன்ற அவசரக் கூட்டம் | 2 |
| நகர் மன்ற சிறப்புக் கூட்டம் | 2 |
| ஒப்பந்தக்குழு | - |
| நியமனக்குழு | - |

| | |
|---|---|
| வரி மேல் முறையீட்டுக்குழு | - |
| உள்ளூர் திட்ட குழும கூட்டம் | - |

**ஆணையர் பணி விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | 01.04.2018 முதல் 31.03.2019 முடிய | திரு. க. பாலு,<br>ஆணையாளர், |

**பொறியாளர் பணி விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | 01.04.2018 முதல் 31.03.2019 வரை | திரு. சி. பாண்டு,<br>நகராட்சி பொறியாளர் |

**மேலாளர் பணி விபரம்**

| | | |
|---|---|---|
| 2. | 01.04.2018 முதல் 31.03.2019 முடிய | திரு. கோ. அசோக்குமார்,<br>மேலாளர் |

**கணக்கர்பணி விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | 01.04.2018 முதல் 31.03.2019 வரை | திரு. சி. சரவணன்.<br>உதவியாளர். |

**துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர்.**

அறிக்கையாண்டில் 01.04.2018 முதல் 31.03.2019 முடிய திரு. பெ. குமார், துப்புரவு அலுவலராகவும், 01.04.2018 முதல் 31.07.2018 முடிய திரு. என். சிவப்பிரகாசம் துப்புரவு ஆய்வராகவும், 09.10.2018 முதல் 31.03.2019 வரை திரு. சாம் கலோனல் மற்றும் திரு. எம். முத்தையா ஆகியோர்கள் துப்புரவு ஆய்வராகவும் பணியாற்றி உள்ளார்கள்.

**வழக்குகள்.**

நகராட்சி வழக்கறிஞராக திரு. ஜி. பாலச்சந்திரன் பி.ஏ.பி.எல்., 25.02.1993 முதல் அறிக்கை ஆண்டு வரை பணியாற்றி வருகிறார்.

**பொது நிர்வாகம்.**

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விபரப்படி பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டு பணியாற்றி வந்தனர். இத்தலைப்பின்கீழ் இவ்வாண்டு செலவீனம் ரூ. 55.73 இலட்சம் ஆகும்.

| | |
|---|---|
| 1. மேலாளர் | 1 |
| 2. கணக்கர் | 1 |
| 3. சத்துணவு திட்ட கணக்கர் | 1 |
| 4. இளநிலை உதவியாளர்கள் | 8 |
| 5. கணினி உதவி திட்ட அமைப்பாளர் | 0 |
| 6. தட்டச்சர் | 1 |
| 7. பதிவறை எழுத்தர் | 1 |
| 8. அலுவலக உதவியாளர் | 5 |
| 9. இரவு காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் | - |

**வருவாய் பிரிவு.**

| | |
|---|---|
| 1. வருவாய் ஆய்வர் | 1 |
| 2. வருவாய் உதவியாளர்கள் | 8 |
| 3. அலுவலக உதவியாளர் | - |

அறிக்கையாண்டில் வருவாய் பிரிவு பணியாளர்களின் செலவீனம் ரூ. 36,46,392/- ஆகும்.

**சாலைகள்.**

நகரில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறையினரால் 12.58 கி.மீ நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**கீழ்கண்ட விபரப்படி அறிக்கையாண்டில் சாலைகள் பராமரிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலை | 27.508 கி மீ. |
| 2 | தார் சாலைகள் | 44.077 கி. மீ. |
| 3 | கருங்கல் ஜல்லி போட்டது | — |
| 4 | கிராவல் சாலை | — |
| 5 | மண் சாலை | 0.842 கி.மீ. |

**பாலங்கள்.**

பாலங்கள் ஏதும் நகராட்சியால் கட்டப்படவில்லை

**அலுவலக கட்டிடம்.**

நகராட்சி அலுவலகம் 01.12.1982 முதல் சொந்த கட்டிடத்தில் இயங்கி கொண்டு வருகிறது.

**தங்குமிடம்,சத்திரங்கள்,தண்ணீர் பந்தல்.**

அ. தங்குமிடம் நகராட்சியால் பராமரிக்கப்பட வில்லை.
ஆ. சத்திரங்கள் ஏதும் நகராட்சியால் பராமரிக்கப்பட வில்லை.
இ. தண்ணீர் பந்தல் ஏதும் நகராட்சியால் பராமரிக்கப்பட வில்லை.

**ஆணையாளர் குடியிருப்பு.**

ஜெயில் தெருவில் உள்ள ஆணையர் குடியிருப்புக்கு அறிக்கை ஆண்டில் செலவு ஏதும் செய்யப்படவில்லை.

**செலவினங்கள்.**

தெரு மின் விளக்குகள் 09.06.1989-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) 344-ன் படி 15.09.1989- முதல் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பராமரிப்பு பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 21.08.1989-ம் தேதிய ந.க.எண்.48885/89/இ1 எண் சுற்றறிக்கையில் மின் கம்பி பணியாளர் பணியிடம் ஒன்றும் அனுமதிக்கப்பட்டு அறிக்கையாண்டில் தெரு மின் விளக்குக்கான மின் பணியாளர் சம்பளம் ஆக ரூ. 8,70,840/- செலவு செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் செலுத்தப்பட்ட மின் கட்டணம் ரூ. 4,04,47,471/- ஆகும்.

இந்நகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் கீழ்கண்டுள்ள விபரப்படி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தெருவிளக்கு அறிக்கையாண்டில் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டது.

1. 4 அடி குழல் விளக்குகள் 1637
2. சோடியம் ஆவி விளக்குகள் 597
3. சோலார் விளக்கு 42
4. ஹைமாஸ் 12
5.சி.எப்.எல் விளக்குகள் 40
6. எல்.இ.டி விளக்குகள் 849
மொத்தம் 3177

**பேருந்து நிலையம்.**

பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு கட்டணம் பேருந்து ஒன்றுக்கு (பி. வகுப்பு) ரூ.12.00 மற்றும் இரவு தங்கும் பேருந்துகளுக்கு ரூ. 20.00 என வசூல் செய்யப்பட்டு வருகிறது. பேருந்து நிலைய கட்டண கழிவறை மூலம் ரூ. 15,75,003/- வருமானம் கிடைத்தது. பேருந்து நுழைவு கட்டணம் குத்தகை ரூ. 13.39 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**தொடக்க கல்வி.**

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த துவக்கப்பள்ளிகள் 01.04.1990 முதல் அரசின் பராமரிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நகராட்சிக்குட்பட்ட 12 பள்ளிகளில் 11 நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களிலும் ஒரு பள்ளி தனியாருக்கு சொந்தமான வாடகை கட்டிடத்திலும் ஒரு பள்ளி கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் (தரைவாடகை) இயங்கி வருகிறது. எல்லா பள்ளிகளிலும் தேவையான அளவு காற்று வசதியும் வெளிச்சமும் உள்ளது. வாடகை கட்டிடங்களில் உள்ள பள்ளிகளைத் தவிர ஏனையவற்றிற்கு விளையாடுமிடங்கள் உள்ளன.

**சத்துணவு திட்டம் :**

விருத்தாசலம் நகராட்சியில் 07.09.1982-ம் நாளிட்ட 1379 எண்ணுள்ள தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினரின் ஆணை படி 5+9 மற்றும் 10+14 வயது உள்ள பிள்ளைகள் மையங்கள் 12ம், 15-09-1982 முதல் துவக்கப்பட்டு இந்நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி பராமரிக்கப்பட்டு வருகிறது.

| **வ.எண்.** | **மையத்தின் விபரம்** | **உணவு உட்கொள்பவர் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | வயலூர் பள்ளி | 35 |
| 2. | கண்டியாங்குப்பம் பள்ளி | 65 |
| 3. | புதுப்பேட்டை பள்ளி | 280 |
| 4. | திரு.வி.க.பள்ளி | 105 |
| 5. | பூதாமூர் பள்ளி | 307 |
| 6. | பூந்தோட்டம் பள்ளி | 38 |
| 7. | சாவடிக்குப்பம் பள்ளி | 135 |
| 8. | அய்யனார் கோவில் தெரு பள்ளி | 38 |
| 9. | முஸ்லீம் பள்ளி | 24 |
| 10. | சாத்துக்கூடல் பள்ளி | 23 |
| 11. | தென்கோட்டை வீதி பள்ளி | 321 |
| 12. | மணலூர் பள்ளி | 26 |
| | **மொத்தம்** | **1397** |

மேற்படி பள்ளி மையங்களில் தினசரி வேலைநாட்களில் சராசரியாக 5+9 வயது உள்ள 495 பிள்ளைகள் உணவு உட்கொள்கின்றனர். இதில் ஆண் 243 பெண் 252 ஆகும். அரசு ஆணை எண். 1222 பொது முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டதுறையின் 22.07.1984-ம் தேதிய ஆணையின் பிரகாரம் 15.09.1984 10 முதல் 15 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 888 மாணவர்கள் பயன் பெறுகிறார்கள்.

மேலும் அரசு ஆணை எண். 184 நாள். 05.12.2002ஆணையின்படி 01.01.2003 முதல் ஒரு மாணவனுக்கு பைசா செலவினம் செயலில் உள்ளது. அறிக்கை ஆண்டில் உணவு செலவினத்திற்காக ரூ.4,42405/- மான்யமாக பெறப்பட்டது.

மேற்படி மையத்தில் உணவு பொருட்கள் விருத்தாசலம் நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்தினரால் ஒவ்வொரு மாதமும் தங்கு தடையின்றி முன்னதாக வழங்கப்படுகிறது. காய்கனி மற்றும் இதர செலவினங்களுக்கு நபர் ஒன்றுக்கு 43.5 பைசா விதம் செலவிடப்படுகிறது.

மேற்படி பிரிவை கண்காணிக்க உதவியாளர் மற்றும் கணக்கர் பதவி ஒன்றினை 07-09-1982-ம் நாளிட்ட 137-ம் எண்ணுள்ள தமிழக அரசின் ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரின் ஆணைப்படி தோற்றுவிக்கப்பட்டது.

**பணியாளர் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | உதவியாளர் மற்றும் கணக்கர் | 1 |
| 2. | அமைப்பாளர்கள் | 9 |
| 3. | சமையலர்கள் | 10 |
| 4. | உதவியாளர்கள் | 9 |

**செலவினம்:**

அறிக்கையாண்டில் உணவு செலவினத்திற்காகவும் மேற்படி பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்திற்காகவும் இந்த இனத்தின் கீழ் ரூ.27,43,093/- செலவிடப்பட்டது. சமையற்கூடங்கள் யாவும் நகராட்சியின் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகிறது.

**பொது:**

இந்நகராட்சியில் இயங்கும் சத்துணவு மையங்களில் அவ்வப்போது அரசால் அளிக்கப்படும் அறிவுரையின் படி குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டு மேற்படி திட்டம் இந்நகராட்சியால் சிறப்பாக செயலாற்றப்பட்டு வருகிறது.

**முட்டை வழங்குதல்:**

அரசு தொலையச்சு செய்தி எண். 8190,1/89 பிற்பட்டோர் நலம் சத்துணவு திட்டம் மற்றும் சமூக நல துறை நாள். 23.03.1989-ன் படி இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகள் சத்துணவு மையம் மற்றும் பள்ளி சத்துணவு மையங்களில் 5+9 மற்றும் 10+14 வயது குழந்தைகள் சத்துணவுடன் வாரத்துக்கு முழுவதும் முட்டை வழங்கப்படுகிறது.

**உயர் நிலைக் கல்வி:**

இந்நகராட்சியால் கல்வி நிலையங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**மருத்துவமனை :**

இந்நகராட்சியால் மருத்துவ மனை ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**பொது சுகாதாரம்:**

**பொது சுகாதார பிரிவில் கீழ்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வந்தனர்.**

| வ.எண். | அலுவலர் பெயர் | பதவி | பணிக்காலம் |
|---|---|---|---|
| 1. | திரு. பி. குமார் | துப்புரவு அலுவலர் | 01.04.2018 முதல் அறிக்கையாண்டு வரையில். |
| 2. | திரு. என். சிவப்பிரகாசம் | துப்புரவு ஆய்வர் | 31.07.2018 முதல் 30.07.2018வரை |
| 3. | திரு. சாம். கலோனல் | துப்புரவு ஆய்வர் | 17.10.2018 முதல் அறிக்கையாண்டு வரையில். |
| 4. | திரு. எம். முத்தையா | துப்புரவு ஆய்வர் | 12.12.2018 முதல் அறிக்கையாண்டு வரையில். |

4 சுகாதார மேற்பார்வையாளர் பணியிடங்களில் அறிக்கையாண்டில் 3 சுகாதார மேற்பார்வையாளர்கள் பணியாற்றி வந்தனர்.

**பொது சுகாதார பிரிவில் அறிக்கையாண்டில் செலவு விபரம் பின்வருமாறு:**

| வ.எண். | தலைப்பு | 2018-19 |
|---|---|---|
| 1. | பொது சுகாதார பிரிவு அலுவலர்கள் | 3494208 |
| 2. | பொது சுகாதார பிரிவு துப்புரவு பணியாளர்கள் | 30780360 |
| 3. | மகப்பேறு அலுவலர்கள் | - |
| 4. | சில்லறை செலவினம் | 1619172 |

**பிறப்பு விகிதமும் மருத்துவ உதவியும்:**

பிறப்பு,இறப்பு பதிவு செய்ய நகரம் மூன்று பிரிவாக பராமரிக்கப்பட்டு பிறப்பு இறப்பு பதிவு அலுவலர்கள் நகராட்சி அலுவலகத்தில் 2 துப்புரவு ஆய்வரால் கவனிக்கப்பட்டு வருகிறுது. அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் எண்ணிக்கை **995** ஆகும். இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 3 ஆகும். நடப்பாண்டில் மக்கள் தொகையில் 1000 பிறப்பு விகிதம் 12.4 ஆகும்.

**மரண விகிதமும், தொற்றுநோயும் கொள்ளை நோயும்:**

அறிக்கையாண்டில் 130 மரணங்கள் பதிவு செய்யப்பட்டன. சென்ற ஆண்டு 210 ஆகும். இது ஜனத் தொகையில் ஒவ்வொரு 1000 க்கும் சராசரி மரண விகிதம் 1.6 ஆகும். நடப்பாண்டில் சிசு மரணங்கள் இல்லை.

**காலரா:**

அறிக்கையாண்டில் பெரியம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் இல்லை. மற்றும் பிளேக் கொசுப்புழு நோய் ஆகிய நோய்கள் அறிக்கையாண்டில் இல்லை. ஆகையால் அந்நோய்கள் பரவி இறந்தவர்கள் எவருமில்லை.

**சுகாதாரம்:**

துப்புரவு தலைப்பில் செலவு ரூ. 1619172/- ரூபாய் ஆகும். சென்ற ஆண்டில் ரூ. 18450372/- ஆகும். குப்பைகள் வண்டிகள், மினி லாரி மூலம் அகற்றப்பட்டு இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் உர உற்பத்தி கிடங்கிற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்நகராட்சி 13 நீரடி பொது

கழிப்பிடங்கள் உள்ளது. இந்நகராட்சியில் உள்ள 13495 வீடுகளுக்கு கழிவிடம் உள்ளது. அறிக்கையாண்டில் உர விற்பனை மூலம் கிடைத்த வருமானம் இல்லை. சென்ற ஆண்டிலும் இல்லை.

<u>**உணவு கலப்பட தடுப்பு விதி:**</u>

நடப்பாண்டில் உணவு கலப்பட தடுப்பு விதி அமுலில் இருந்து வந்தது. இந்நகராட்சியில் உணவு ஆய்வாளர் எவரும் இல்லாததால் உணவு கலப்பட தடுப்பு குறித்து நடப்பாண்டில் உணவு மாதிரி பொருட்கள் பரிசோதனைக்காக எடுக்கப்படவில்லை. உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தினை கையாள்வதில் எவ்வித இடையூறும் ஏற்படவில்லை. உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் உரிமையாணை வழங்கும் முறை இந்நகராட்சியில் இவ்வாண்டில் அமுலில் இல்லை.

<u>**ஆபத்தானதும், அருவருக்கத்தக்கதுமான வாணிபம்:**</u>

இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர்களால் கண்காணிக்கப்பட்டு எல்லா வகையான தொழில்களுக்கும் 1920 ம் வருடத்திய திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் படி சட்ட திட்ட விதிகளுக்கு உட்படுத்தப்பட்டு உரிமையாணை வழங்கப்பட்டது. உரிமையாணை மூலம் நகராட்சிக்கு ரூ. 1,56,052/- வருமானம் கிடைத்தது.

துப்புரவு ஆய்வர்கள் வியாபார ஸ்தலங்களை அடிக்கடிப் பார்வையிட்டு சுகாதார நிபந்தனைகள் அமுல் செய்யப்பட்டன.

<u>**குடிநீர் வழங்கும் திட்டம்:**</u>

இந்நகராட்சியால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 1964-ம் ஆண்டு முதல் செயல்பட்டுவருகிறது. கீழ்கண்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

| வ.எண். | பகுதி மற்றும் மோட்டார் திறன் | வழங்கப்படும் தண்ணீர் அளவு மற்றும் பகுதிகள் |
|---|---|---|
| 1. | வடக்குப் பகுதி பிரிவு 1 (ஜங்ஷன் ரோடு மேல் நிலைத் தொட்டி) | குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுடைய பகிர்மானக் குழாய்6146.60 மீட்டர் நீளமுள்ள குழாய் மூலம் நாச்சியார்பேட்டை, புதுக்குப்பம், பூவராக நகர், ஆலடி ரோடு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 2. | வடக்குப் பகுதி பிரிவு 2 ( பேருந்து நிலைய ஆழ் குழாய் கிணறு) | குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 2.00 லட்சம் லிட்டர் சி. பம்பிங் மெயின் (146.30 நீளமுள்ள ) மூலம் நீர் ஏற்றப்பட்டு 8296.59 மீட்டர் நீளமுள்ள குழாயின் மூலம் செல்வராஜ் நகர், அண்ணா நகர், தாஷ்கண்ட் நகர் மற்றும் வீரபாண்டியன் தெருக்கள் |

| | | |
|---|---|---|
| | | ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்யப்படுகிறது. |
| 3. | வடக்குப் பகுதி பிரிவு 3 ( தெற்கு பெரியார் நகர் ஆழ்குழாய் கிணறு) 20 குதிரை வேக சக்தி நீர்மூழ்கி மோட்டார். | குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிக்கு அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து நீர் ஏற்றப்பட்டு 6318.83 மீட்டர் நீளம் உள்ள குழாய் மூலம் பெரியார் நகர், கடலூர் ரோடு, போலீஸ் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 4. | தெற்குப் பகுதி ( சாவடிக்குப்பம் ஆழ்குழாய் கிணறு) 30 குதிரை வேக சக்தி நீழ் மூழ்கி மோட்டார் | குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியதினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 6.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு சாவடிக்குப்பம் ஆழ் குழாய் கிணற்றிலிருந்து 200 மிமீ ஏசி குழாய் மூலம் ( 3080 மீட்டர் நீளமுள்ள ) நீர் ஏற்றப்பட்டு 10949 மீட்டர் நீளம் உள்ள குழாய் மூலம் நகரின் தெற்கு பகுதிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 5. | சக்தி நகர் 25 குதிரை வேக சக்தி நீர் மூழ்கி மோட்டார் | கொள்ளளவு 2.00 லட்சம் லிட்டர் கொண்டது. சக்தி நகர், காமராஜ் நகர், கருணாநிதி நகர், பாரதி நகர், துர்கா நகர், முல்லை நகர், கிருஷ்ணா நகர், ஆலடி ரோடு (பகுதி), அன்பு நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. |
| 6. | வடக்குப் பெரியார் நகர் 25 குதிரை வேக சக்தி நீர் மூழ்கி மோட்டார் | கொள்ளளவு 2.00 லட்சம் லிட்டர் கொண்டது. டிரைவர் காலனி, ராஜீவ் காந்தி நகர், நவநீதம் நகர் மற்றும் பெரியார் நகர் வடக்குப் பகுதி முழுவதும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. |
| 7. | வயலூர் ஆழ்குழாய் கிணறு 7.5 குதிரை வேக மோட்டார் | 22500 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி மூலம் நேரடியாக வயலூர் பகுதிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 8. | கண்டியங்குப்பம் ஆழ்குழாய் கிணறு 10.0 குதிரை வேக சக்தி. | 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்க தொட்டி மூலம் நேரடியாக கண்டியங்குப்பம் பகுதிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 9. | பூந்தோட்டம் ஆழ்குழாய் கிணறு 15.0 குதிரை வேக சக்தி | 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர் தேக்கத் தொட்டி மூலம் நேரடியாக மேட்டுக் காலனிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 10. | சாத்துக்கூடல் ரோடு ஆழ் குழாய் கிணறு 5.0 குதிரை வேக சக்தி | 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் நேரடியாக மேட்டுக் காலனிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 11. | நரிகுறவர் காலனி ஆழ் குழாய் கிணறு 7.5 குதிரை வேக சக்தி | 5000 லிட்டர் மேல் நிலைத் தெர்ட்டி மூலம் நரிக்குறவர் காலனி மற்றும் செல்வராஜ் நகருக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 12. | பூதாமூர் இந்திரா நகர் ஆழ்குழாய் கிணறு 7.5 குதிரை வேக சக்தி | பூதாமூர், இந்திராநகர், சிதம்பரம் ரோடு முதலிய பகுதிகளுக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 13. | பூதாமூர் புதுக்காலனி 10 குதிரை வேக சக்தி | பூதாமூர் புதுக்காலனி மற்றும் சிதம்பரம் சாலை பகுதிக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 14. | பெரியார் நகர் ( எம்.ஜி. ஆர் நகர்) 10 குதிரை வேக சக்தி | எம்.ஜி. ஆர் நகர் பகுதிகளுக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 15. | வீரபாண்டியன் தெரு 5.0 குதிரை வேக சக்தி | வீரபாண்டியன் தெருக்களுக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது. |
| 16. | அண்ணா நகர் 15 குதிரை திறன் வேக சக்தி | அண்ணா நகர் முழுவதும் நேரடி குடிநீர் விநியோகம் வழங்கப்படுகிறது. |
| 17. | பெரியார் நகர் தெற்குப் பகுதி பூங்கா 10 குதிரை வேக சக்தி | நேரடி குடிநீர் விநியோகம் பெரியார் நகர் தெற்குப் பகுதி முழுவதும். |
| 18. | கஸ்பா காலனி 5.0குதிரை வேக சக்தி | நேரடி குடிநீர் விநியோகம் கஸ்பா காலனி மற்றும் பாரதி நகர். |
| 19. | முனியப்பர் கோவில் 10.0 குதிரை வேக சக்தி | நேரடி குடிநீர் விநியோகம் பூதாமூர் பகுதிகள். |
| 20. | வானொலி திடலில் 5.0 குதிரை வேக சக்தி | நேரடி குடிநீர் விநியோகம் சன்னதி தெரு, தீர்த்த மண்டப தெரு |
| 21. | சாவடிக்குப்பம் 5.0 குதிரை வேக சக்தி | நேரடி குடிநீர் விநியோகம் துப்புரவு பணியாளர் குடியிருப்பு மற்றும் சாவடிக்குப்பம். |

விநியோக குழாய் இல்லாத பகுதிகளில் 87 கைப்பம்புகள் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 90 லிட்டர் குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் குடிநீர் குழாய்கள் பற்றி விபரம் வருமாறு.

1. பொது குழாய்கள் 150
2. வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள் 7648
3. வீட்டு உபயோகமல்லாத குடிநீர் குழாய் இணைப்புகள் 121

ஆண்டு துவக்கத்தில் 7528 வீட்டுக் குழாய் இணைப்புகள் இருந்தன. அறிக்கையாண்டில் குடிநீர் இணைப்புகள் 241 கொடுக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டு முடிவில் 7769 இணைப்புகள் இருந்தன.

**குடிநீர் கட்டணம் :**

வீட்டுக் குழாய் இணைப்புகளுக்கு கீழ் கண்ட விகிதத்தில் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் 17.06.1982-ம் தேதிய ந.க.எண். 37158/92/எம்பி3 சுற்றறிக்கைக்கிணங்க 31.07.1992-ம் தேதிய விருத்தாசலம் நகர் மன்ற 110-ம் எண் தீர்மானத்தின்படி 01.11.1992 முதல் குடிநீர் கட்டணம்
வசூலிக்கப்படுகிறது.

**மீட்டர் கட்டண விகிதம்**

| | | |
|---|---|---|
| 1. | அ. வீட்டு உபயோகத்திற்கு | ரூ. 50.00 மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச கட்டணம். |
| | ஆ. வீட்டு உபயோகமற்றது | ரூ. 250.00 மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச கட்டணம். |
| 2. | தொழில் நோக்கு | ரூ. 250.00 மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச கட்டணம். |
| 3. | வியாபார நோக்கு | ரூ. 250.00 மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச கட்டணம். |

**குழாய் இணைப்பு விகிதம்**

| | | |
|---|---|---|
| 1. | வீட்டு உபயோகம் | ரூ. 50.00 மாதம் ஒன்றுக்கு |
| 2. | வீட்டு உபயோகமற்றது | |
| | அ. தொழில் நோக்கு | ரூ. 250.00 மாதம் ஒன்றுக்கு |
| 3. | ஆ. வியாபார நோக்கு | ரூ. 250.00 மாதம் ஒன்றுக்கு |

மின்சாரம் போதிய அளவு கிடைக்காத ஒரு சில நாட்களில் மட்டும் குடிநீர் பிரச்சினை எழுந்ததை முன்னிட்டு இதனை தவிர்க்கும் பொருட்டு குடிநீர் நீரேற்று நிலையங்களில் ஜெனரேட்டர் அறைகள் கட்டப்பட்டு ஜெனரேட்டர்கள் பொருத்தி குடிநீர் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

**கழிவு நீர் திட்டம்.**

இந்நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் ஏதுமில்லை.

**நாய் மற்றும் குரங்கு பிடித்தல்:**

அறிக்கையாண்டில் குரங்குகள் பிடிக்கப்படவில்லை. நாய்கள் மற்றும் குரங்குகள் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**டோபிக்கானா:**

இந்நகரில் ரீ.ச. எண். 376/1-ல் ரூ. 46979/- மதிப்பீட்டில் கட்டப்பட்ட சலவைத்துறை கட்டடத்தின் தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டுவிட்டன. மேற்படி துறையில் மின்சார மோட்டார் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

**போக்குவரத்து:**

இந்நகராட்சியால் பேருந்து வண்டி போக்குவரத்து ஏதும் நடத்தப்படவில்லை. இந்நகரிலிருந்து பிற இடங்களுக்கு தனியார் துறை மற்றும் அரசு துறை பேருந்துகள் செல்கின்றன.

**அங்காடிகள்:**

இந்நகராட்சியில் கீழ்கண்ட வாரச்சந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1. வாரக் காய்கறி சந்தை.
2. வாரக் கால்நடை சந்தை.
3. தினசரி காய்கறி அங்காடி.

**நில வளர்ச்சி:**

நகரின் மொத்த பரப்பளவு 25.57 சதுர கிலோ மீட்டர்கள். இந்நகராட்சி 17.01.1970 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நகராட்சியில் முழுமைத்திட்டம் அரசாணை (நிலை) எண். 2024 நாள் 20.09.1973-ல் அறிவிப்பு செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண். 395 நாள். 24.05.1984-ல் இணக்கம் அளிக்கப்பட்டு, அரசாணை (நிலை) 645 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை ( ந.பு.வ.து IV) நாள். 05.10.1994-ன் படி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி எல்லைக்குள் உத்தேசிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள் 1 முதல் 6 வரை உள்ளது. இந்த ஆறு திட்டங்களும் வரைவு நிலையில் உள்ளது. இவ்வாண்டு கட்டிட விண்ணபப்பங்கள் 119 பெறப்பட்டு கட்டிட அனுமதி 69 வழங்கப்பட்டு உள்ளது. இப்பிரிவிற்கு ஒரு நகரமைப்பு ஆய்வர் உள்ளார். இந்நகராட்சியில் முழு நேர நகரளவரும் இரண்டு சங்கிலி ஆட்களும் தொடர்ந்து பணியில் இருக்கிறார்கள். நகரளவுத் துறையின் சிப்பந்திகளுக்கு ஆகும் செலவு 2/3 பங்கு நகரசபை அரசுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது. அறிக்கை ஆண்டில் தொகை ஏதும் செலுத்தப்பட வில்லை. இந்நகராட்சிப் பகுதிகள் புதியதாக நில அளவை செய்யப்பட்டு ரெவின்யூ சர்வேயிலிருந்து நகரளவையாக மாற்றப்பட்டு எட்டு வார்டுகள் 245 பிளாக்குகளாக பிரிக்கப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட இனங்களின் மூலம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ. 9,34,030/- சென்ற ஆண்டு வருமானம் ரூ. 2,42,688/- ஆகும். மேலும் பெரிய வேலைகளுக்கும் அபிவிருத்தி செலவு ஏதும் செய்யப்படவில்லை. நகரமைப்பு பிரிவில் அங்கீகரிக்கப்படாத மனைகள் முறைப்படுத்திட அறிக்கை ஆண்டில் அரசாணை எண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD(3) துறை, நாள். 13.10.2017ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 244 மனைகள் முறைப்படுத்திட உரிய அனுமதி வழங்கப்பட்டது. இதனால் நகராட்சி கணக்கில் ரூ. 86,77,197/– வருவாய் வரப்பெற்றுள்ளது.

**ஆடு அறுக்கும் தொட்டிகள்:**

இந்நகராட்சியில் பகுதி II 2007-2008-திட்டத்தின் கீழ் ரூ. 28.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படஉள்ளது. ஒரு ஆடு அறுக்கும் தொட்டி பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆண்டில் வரவு ரூ.3,68,288/- ஆகும்.

**பொது வருவாய்கள்:**

இவ்வறிக்கையாண்டில் இந்நகராட்சியில் பொது வரிகள் மூலமாகவும், இதர இனங்கள் மூலமாகவும் பெறப்பட்ட வருமானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | 2018-19 |
|---|---|---|
| 1. | சொத்துவரி | ரூ. 207.89லட்சம் |
| 2. | தொழில் வரி | ரூ.20.87 லட்சம் |
| 3. | கேளிக்கை வரி | ரூ.——— |
| 4. | முத்திரைத்தாள் மீதான மிகு வரி | ரூ. 66.16 லட்சம் |
| 5. | மாநில நிதி ஆணைய மான்யம் வரி | ரூ.941.27 லட்சம் |

**அறிக்கையாண்டில் வரியினங்கள் எண்ணிக்கை மற்றும் நகருக்கு வருவாய் கீழ்வருமாறு.**

| | | |
|---|---|---|
| | | 2018-19 |
| 1. | வரிவிதிக்கப்பட்ட கட்டிடங்கள் | 111 |

**பிறப்பு மற்றும் இறப்பு கட்டண விபரம்:**

அறிக்கையாண்டில் பிறப்பு, இறப்பு நகல் எடுக்க பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் அரசாணை எண். 380, நாள். 12.10.2017ன்படி கீழ்கண்டவாறு கட்டணம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **காலவரம்பு மற்றும் பிறப்பு இறப்பு விபரங்கள்** | **01-12-1998 முதல் வசூலிக்கப்படும் கட்டண விபரம்** |
|---|---|---|
| 1. | பிறப்பு 21 நாட்களுக்கு மேல் இறப்பு 21 நாட்களுக்கு மேல் ஒரு மாதத்திற்கு பதிவு செய்ய தாமத கட்டணம் | ரூ.100 |
| 2. | ஒரு மாதத்திற்கு மேல் 1 ஆண்டுக்குள் பதிவு செய்ய தாமத கட்டணம் | ரூ.200 |
| 3. | ஒரு ஆண்டுக்கு மேல் நீதி மன்றத்திலிருந்து பெறப்படும் உத்திரவின் மீது பிறப்பு (அ) இறப்பு பதிவு செய்ய கால தாமத கட்டணம் | ரூ. 500 |
| 4. | குழந்தையின் பெயரை பதிவு செய்ய ஒரு ஆண்டுக்கு மேல் கால தாமத கட்டணம். | ரூ. 200 |
| 5. | பிறப்பு / இறப்பு பதிவேட்டில் பதிவு தேடுதல் கட்டணம் | - |
| அ. | ஒரு ஆண்டுக்கு | ரூ.100 |
| ஆ. | ஒவ்வொரு ஆண்டிற்கும் | ரூ.100 |
| இ. | இறப்பு / பிறப்பு பதிவேட்டிலிருந்த பிறப்பு / இறப்பு படிவம் வழங்க | ரூ.200 |
| ஈ. | பிறப்பு (அ) இறப்பு பதிவில்லா சான்று வழங்க | ரூ.100 |

**ஆணையாளர்,**
**விருத்தாசலம் நகராட்சி.**